J. R. T. S.] GENERAL SERIES. [No. 16.

# THE HON. FRANCIS NEWPORT.

[Adapted for such as are acquainted with the truth of Christianity.]

*சனம்பொருந்திய

# பிறஞ்சி நூபோட்

## என்பவருடைய கதை.

இங்கிலாந்தென்னுந் தேசத்திலே பிறஞ்சிநூ
போட் என்றொருதுரை இருந்தார். அவர் வா
லிப வயதிலே சாஸ்திரப்பள்ளிக்கூடத்திற் சே
ர்ந்திருந்து சாஸ்திரங்களைப் படித்துத் தேறின
துமன்றித் தேவ காரியங்களுக்கடுத்த கல்விக
ளையும் ஆராய்ந்து நன்றாய்ப் படித்துக்கொண்
டுஇருபத்தொரு வயதானபொழுது தாமிருந்த
ஊரை விட்டுலொண்டனென்னும் பெரிய நக
ரிக்குட்போய் அங்கே நடமாடி நியாயசாஸ்தி
ரங்களையும் படித்து மிகுந்தபுத்திசாலியாய் அ
வ்விடத்திலே தேவபத்தி சற்றாகிலும் இல்லாத
துற்குணவாலிபர்களோடே சகவாசம்பண்ணி
அவர்களைப்போலே தாமுந் துன்மார்க்கத்தி
லே பயின்றுவந்தார்.

அவ்வண்ணமாய் அவர் நடந்துவருங் காலத்
திலே அவருக்கொரு கொடியவியாதிவந்துமே

2d, Ed. AMERICAN MISSION PRESS, JAFFNA [10,000.
1842.

விட்டுக்கொண்டதினாலே தமக்கு மரணம் முடுகிக்கொண்டதென்று நினைத்துத்தாம் அப்பொதிருக்கிற நிலைமையையும் உற்றுப்பார்த்து அந்த நிலைமையிலிருந்து மரணித்தால் நடுத்தீர்ப்புநாளிலே நிச்சயமாய் நரகத்துக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு அவ்விடத்திலே தள்ளுண்டு நித்திய காலமும் வேதனைப்பட வருமேயென்று உணர்ந்து பயந்து துக்கமாயிருந்தார்.

அந்நேரம் அவருடைய தோழரில் ஒருவன் அவரிடத்திலே வந்து எதுக்காகத் துக்கிக்கிறீரென்றான்? அவரும் அவனைப்பார்த்துப் பாவாளியாய்க் கெட்ட நிலைமையைக்கொண்டிருக்கிற நான் இந்த வியாதியினால் மரணித்து நரகத்திலே விழுந்து முடிவில்லாத வேதனைப்படுவேனேயென்று துக்கிக்கிறேனென்றார்.

அதை அவன் கேட்டு நீர் மரணித்தால் உமது ஆத்துமாவும் அழிந்து வேதனையும் நின்றுவிடுமே. பின்னை நரகத்துக்குப்போவதும் அங்கே வேதனைப்படுவதும் யாரென்றான்? அவர் ஆனாலும் தாம்நரக ஆக்கினைக்குக்கிட்டியிருப்பது நிச்சயமென்று காண்பதினால் முன்போலே அவனுடைய பேச்சுகளை நம்பிக்கொள்ளாமற் கவலையாயிருக்கையில் ஒரு குரு அவரைப் பார்க்க அங்கே வந்தார். அப்போது துரையும் ஆவலோடே அந்தக் குருவைநோக்கி ஐயா, என்னுடைய சிநேகிதனாகிய இவருக்கு ஆத்துமா அழியாத நித்திய வஸ்து என்பதைப் பற்றி உம்மாற் கூடிய திட்டாந்தங்களை எடுத்துக் காட்டுமென்று வேண்டிக்கொண்டார்.

அதற்குக் குருவானவரும் அந்தப் பொல்லாத மனிதனுக்குத் தகுதியான பலபல திட்டாந்தங்களை எடுத்துக் காட்டினார். அவர் எடுத்துக்காட்டின திட்டாந்தங்கள் மிகவும் உறுதியும் உண்மையுமாயிருந்ததினால் அவன் யாதொரு வார்த்தையும் பேசாமல் அவ்விடத்தைவிட்டு நழுவிப் போய்விட்டான்.

இதைக்கண்டு அந்த வியாதிக்காரத் துரை மேன்மேலும் அடங்காத கவலையுள்ளவராய்ப் பெருமூச்சுவிட்டார். அவர் பெருமூச்சுவிட்டதைக் குருவானவர் கண்டு துக்கப்பட்டுக்கொண்டிருக்குங் காரியமேதென்று மிகவும் அன்பாக அவரைக் கேட்கத், துரையும் அவரை நோக்கி ஐயா, என்னசொல்லுவேன்! நான் தத்துவத்தோடுங் கூர்மையான புத்தியோடும் இருந்த நாட்களிலே பாவம் புண்ணியம் இன்னின்னதென்று பகுத்தறிந்து பாவத்தை வெறுத்து இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவை ஏற்று அவர் சொன்ன வாக்கியங்களின்படியே தேவபத்தியுள்ளவனுஞ் சன்மார்க்கனுமான புண்ணியசாலியாகி நடவாமல் வீணிலே துன்மார்க்கனாய் உலக மாயைகளை விரும்பி அநேக பாதகங்களையும் நடப்பித்து இவ்வளவு கொடிதான வியாதியினால் உபத்திரவப்படுவதுமல்லாமல் இனிமேலும் நித்திய ஆக்கினைக்குள்ளாய்ப்போகவும் ஏதுவாயிருப்பதினாலே மிகுதியாய்த் துக்கிக்கிறேன். இதினின்று தப்பித்துக்கொள்ளும்படி கிறிஸ்துவை ஏற்று விசுவாசிக்கிறதற்கு இனிச்சமயமில்லையே, நரகத்திலே நான் படப்போகிற ஆக்கினைக்குத்

தொடக்கம் இதுவே, ஐயோ! என்று புலம்பி அழுதார்.

இந்தவிதமான காரியத்தைக் கேட்டதினால் அந்தக் குருவானவர் மனந் திகைத்துச் சற்றுவேளை பேச்சில்லாமலிருந்துபின்பு அவரைப் பார்த்து ஆத்துமம் அழியாத வஸ்துவென்று நீர் அறிந்திருப்பது நல்லகாரியம், ஆகிலுங் கிடைத்திருக்கிற இந்த நற்சமயத்திலானாலுங் கிறிஸ்துவை விசுவாசித்து மோட்சத்துக்குரிமையாகாமல் முன்போலப் பசாசின் தந்திரத்துக்குட்பட்டு நன்மையைத் தேட இனிமேற்காலம்போதாதென்று நினைத்து வீணாய் நொந்து துக்கித்துக்கொண்டு இருக்கவேண்டாம். பராபரன் சகலரையும் இரட்சிக்கச் சித்தமுள்ளவராகவுந் தம்மிடத்திலே சார்ந்துவருகிறவர்களில் இரக்கம் வைக்கிறவராகவும் இருப்பதினால் அவரண்டை திரும்பி நல்லவனாகும்படி இப்பொழுதும் நற்சமயமிருக்கின்றதேயென்றார்.

அதற்குத் துரை அந்தக் குருவைப் பார்த்து ஐயா, பாவிகளாகிய நமக்காக நிந்தைப்பட்டுச் சிலுவை மரத்திலறையுண்டு மரணமடைந்த யேசுக்கிறிஸ்துவை முன் எற்றிருந்து அவர் மூலமாகப் பராபரனிடத்திலிருந்து வந்த அநேகம் நன்மைகளைப் பெற்றனுபவித்தும் அவரை நேசியாமல் விட்டு வீணுடம்பரமாய் நடந்துவந்த பேதையாகிய நான் இந்தஉபத்திரவ காலத்திலே அவரை நேசிக்கவும், விசுவாசிக்கவும், மோட்ச நன்மையைப் பெறும்படி முயற்சிபண்ணவுங் கூடுமோ? கூடாதே ஐயோ! ஆங்கா

லத்திலே அந்த இராட்சகரை ஒரு பிடியாய்ப் பி
டித்துக்கொள்ளாமற்றள்ளி மனம்போனபோ
க்கிலே நடந்துவந்ததினாலே எனக்கு இப்பொ
ழுது வந்திருக்கிற ஆக்கினை இவ்வளவு.இனிமே
ல் நரகத்திலே படப்போகிற ஆக்கினை எவ்வள
வோ தெரியாதே! நரக வேதனைக்கு முடிவில்
லையென்பதினாலேதான் மிகுதியும் ஏங்குகிறே
ன். இதற்கு என்ன செய்யலாம்! ஒன்றுமில்லை
யே என்று மனதிலே நினைக்கவும் வாயினாலே
சொல்லவுங் கூடாத மிகுந்த பயங்கரத்துடனே
சொல்லி வியாகுலப்பட்டார்.

அந்தக் குருவோ வேறொன்றும் பேசாமற்
கருத்தாவைப் பார்த்து வேண்டிக்கொள்வது
பெரிய காரியம். அப்படிச் செய்வோமோ எ
ன்று கேட்கத் துரை என்னுடனே இப்படி அ
லட்டவேண்டாமென்று சொல்லியுங் குருமே
ன்மேலும் வருந்திக் கேட்டதினாலே அதற்குச்
சம்மதித்தார்.

அப்பொழுது குருவானவர் முழந்தாளினி
ன்று வேண்டுதல்செய்கையில், அந்தத் து
ரை புரண்டு உருண்டு கால் கையடித்து அ
லறினார். வேண்டுதல் முடிந்தபின்பு குருவா
னவர் துரையை என் இப்படி வருத்தப்பட்டுப்
புலம்புகிறீர்!என்று கேட்கத் துரை நரகத்தி
ருப்பவர்கள் மோட்ச நன்மைகளை நினைத்து
அதிக துயரப்படுவதுபோல நானும் நீதியுள்ள
பராபரனை நீர் தொழுது புகழ்ந்து கொண்டா
டினதைக் கண்டு இவ்விதமாய் உத்தம பத்தியு
ள்ளவர்கள் பெறுஞ் சந்தோஷத்தையும் பாக்கி

யத்தையும்இகழ்ந்து நரகத்திலே நித்திய கால
முந்தேவதூஷணம்பண்ணி அழுது புலம்பிப்ப
ல்லைக் கடித்து அக்கினி கந்தகம் முதலானவை
களால்வெதும்பி வேதனைப்படஏதுவானேனே
என்றுங்கவலைவந்து அழுகையினால் உழன்றுபுர
ண்டுவிதனித்துப் பீடைப்படுகிறேனென்றார்.

அதற்குஅந்தக் குருவானவர் இன்னுந் தான்
சொல்வதைக் கேட்கவேண்டுமென்று மன்று
டிக்கொண்டு நீர் சொன்ன காரியம் என்ன மா
திரி? நரகத்தில் இருப்பவர்கள் நித்தியகாலமும்
நரகத்துக்கென்று தள்ளப்பட்டிருப்பதினால்
அவர்கள் துக்கித்து வருத்தப்படவேண்டுவது
தான். நீரோ இன்னும் உயிரோடிருப்பதினாற்
கவலையென்ன? சுவிசேஷத்தை எடுத்து வாசித்
துப்பாரும். அப்பொழுது நல்வழியைக் கண்
டு கவலையை நீக்கிப் புத்தியாயும் பத்தியாயும்
நடந்துகொள்வீரென்றார்.

அதற்கும் அந்தத்துரை ஐயா, நித்திய பரா
பரன் தாமே எனக்கு விரோதமாய் இவ்வளவு
உபத்திரவங்களினால் வாதித்து நீதியைச் சரிக்க
ட்டத் திருவுளமாய் இருக்கையிற் சுவிசேஷத்
தினால் இனி என்னவாகும்? நீதி விசாரிக்கிற ப
ராபரனுடைய முனிவில் அகப்படுகிறது பயங்
கரமான காரியம். அவர் எனக்குச் சத்துருவா
யிருந்து என்னைக் கண்டித்துப் பார்த்து நித்தி
ய அக்கினியிற்றள்ளினாற் சகித்துக்கொள்ள எ
ன்னாற் கூடுமா? எரிகிற நித்திய அக்கினியிலிருக்
கக்கூடியவர்களார்? பராபரனுடைய முனிவுக்
கெதிராக நாம்நெருப்பிலே இட்டபஞ்சிலையைப்

போலிருக்கிறோமேயென்று சொல்லிப் பின்பு
அடுப்பிலே இருந்த நெருப்பைப் பார்த்து ஐ
யோ! மோதியெரிகிற நித்திய நரகமென்ற அ
க்கினிச் சூளைக்கு ஒரு மணித்தியாலமாக நீங்கிப்
பராபரனுடைய தயையைப்பெறக்கூடுமேயா
கில் இப்படிப்பட்ட அற்ப நெருப்பிலே கோ
டாகோடி வருஷங்களாகக் கிடந்தாலுமென்ன!
நித்திய நரகவேதனையை ஆர் ஆற்றுவார்!
ஐயோ! என்று கண்ணீர்விட்டு அழுதார்.

அதைக் கண்டு அவ்விடத்திலிருந்தவர்களெல்
லாரும் இரங்கி அழுதபொழுது துரை அவர்
களைப்பார்த்து ஏன் அழுகிறீர்கள்? இப்படி அ
ழுதுகொள்வதால் எனக்கு வரும் முடிவில்லா
த நித்திய நெருப்பை நீக்கிப்போடலாமோ? கூ
டாதே. பின்னை என்னபலன் பெறும்படி அழு
கிறீர்கள்? எனக்காக அழாமல் உங்கள் பாவங்க
ளை நினைத்து அழுங்கள். கலங்கப்பண்ணாமல்
உங்கள்பாட்டிலே போங்களென்றார்.

அப்பொழுது போதகருங் கவலைப்பட்டுக்
கொண்டு வீட்டுக்குப்போய்விட, அன்றிராத்தி
ரி அங்கிருந்தவர்களெல்லாருந் தம்முடைய பா
டுகளைக்கண்டு துக்கிப்பாயிருக்கையில் துரை
யானவர் வாய்விட்டு உரத்த சத்தமாய் என்ஆ
ண்டவரே, தேவரீர் நீதியைச் சரிக்கட்டுகிறவர்.
ஆகையால் என் அக்கிரமங்களுக்காகக் கடுங்
கோபமுற்று இனிமேல் என்னை நரகத்திலே த
ள்ளுவதுமல்லாமல், எல்லாரும் உம்முடைய
நீதியைக்கண்டு உமக்குப் பயந்து நடக்கும்படி
நான் உயிரோடிருக்கையில் என்னை உபாதிக்கி

நீரோ? அதினிமித்தம் நான் உமக்குக்கிட்டவ
ராமல் ஓடிப்போய் எங்கேயாவது ஒளித்துக்
கொண்டிருப்பேன். அதற்குத்தேவரீரெவ்விட
த்திலும் வியாபித்திருக்கிறவர். ஆகையால் எங்
கேஓடி ஒளிப்பேன் சுவாமியென்றுபுலம்பினார்.

மறு நாளிலே அவருடைய உறவுமுறையாரி
லுஞ்சிலர் அவரைப் பார்க்கவந்து அவருடனே
ஐயா, உமது உறவு முறையாராகிய நாங்கள் வ
ந்து நிற்கிறோம். எங்களுடனே ஏன் ஒன்றும்
பேசவில்லை! எங்களுடனே என்ன வெறுப்பெ
ன்று கேட்டார்கள். அந்தப் பேச்சுக் காதிலே
விழுந்தவுடனே துரை அவர்களை உற்றுப்பார்
த்துநீங்கள் வந்தது என்னகாரியம்? நீங்கள் இன்
னமும் எனக்கு எவ்வளவு காலமட்டும் உறவுமு
றையாரென்று சொல்லித்தொந்தறைப்படுத்து
வீர்கள். சற்றுவேளையில்என்சடம்விழுந்துபோ
ம்அப்பொழுது உங்களுக்கும் எனக்குமிருக்
கிற உறவுமுறையும் நின்றுபோம். பின்பு நா
னே நரகத்திலே விழுந்து அங்கே உள்ள பசா
சுகளுக்கு உறவுமுறையாய்ப்போவேன். இதை
யறியாமல் ஏன் வந்து அலட்டி என்னை வாதிக்
கிறீர்கள்? பேசாமல் இருங்களென்றார்.

அதைக் கேட்டவுடனே அவருடைய உறவு
முறையாரெல்லாரும் ஒருத்தரோடொருத்தர்
இரகசியமாய் ஆலோசனை பண்ணி இவருக்கு
மாறாட்டம் அல்லோ வந்துவிட்டதென்று பே
சுகிறதை அவர் கண்டு வீணாய் ஏன் கூடிக்கூடி
இரகசியம் பேசுகிறீர்கள்? எனக்கு ஒரு மாறா
ட்டமுமில்லை, சுபாவமாய்த்தானிருந்து பேசுகி

றேன். எனக்கு மாறுட்டக்குணமுண்டானால்
நான் என்னுடைய பாவக்கேட்டையும் அதினால்
வரும் நித்திய நிற்பந்தத்தையும் எடுத்துப்பே
சுவேனோ? வேறேபலபல விதமான தூஷணங்
களையும் வீண் காரியங்களையும் அல்லவா எடுத்
துப் பேசுவேன். அதையாகிலும் உற்றுப்பாரு
ங்களேன். நான் இப்படி வருந்தி மனம் நொந்
து பேசிப் புலம்பு எனக்கு வந்தகேடுபாடு எ
ன்னவென்றாற் கேளுங்கள். ஐயோ! நான் சிறு
வயதில் தேவகாரியங்களை நன்றாய் ஆராய்ந்து
படித்துக் கத்தர் அருளிச்செய்திருக்கிற சுவி
சேஷத்தைக் கைக்கொண்டு அதில் மனிதருடை
ய பாவத்தைநிவாரணம்பண்ணி மனிதரைமோ
ட்சத்திலே சேர்க்கும்படிக்கு யேசுக்கிறிஸ்து
செலுத்தினபலி ஒன்றேயல்லாமல் வேறொன்று
ந் தக்கதாகவில்லை என்பதையும் நம்பிக் கிறிஸ்
துவை ஏற்று விசுவாசித்துச் சகலருக்கும் நல்லவ
னாய் நடந்து வந்தும் பின்னளிற் பொல்லாத
துற்சனரோடே கூடிக் கிறிஸ்துவையுந் தள்ளி
ப்போட்டுக் கனவிலுங் கத்தா என்னுஞ் சொல்
லை நினையாமற் தீரமறந்து என்னளவிலே நான்
ஆகாதவனாய் நடந்து வந்ததுமன்றி, வேறு அ
நேகரையும் பொல்லாங்குக்குட்படுத்தி வந்து
கடைசியிலே அவ்வேதனைக்குள்ளானதுமாத்தி
ரமோ இனிமேலும் நித்திய நரகவேதனைப்பட
வும் ஏதுவானேன். இதுதானெனக்குவந்த கே
டுபாடு. இதை நீக்க வழிவகை இருக்கவும்
அதைத்தேடக்கூடாததினாற்புலம்பிக்கொண்டி
ருக்கிறேன். இத்தையறியாமல் நீங்கள் அதையு

மிதையுமேன் பேசுகிறீர்களென்று சொல்லி அறிவில்லாமற் சற்றே மயக்கமானார்.

அந்த மயக்கத்துக்கு அவருடைய உறவுமுறையார் சில பிரயோகங்களைப் பண்ணினதினால் மறுபடியும் அறிவுதெளிந்து அவர்களைப்பார்த்து மயங்கிப்போய் யாதொரு கவலையுமில்லாமற் கிடந்த என்னை அருட்டிவிட்டுத் திரும்பத் திரும்பக் கவலையை எழுப்பி வாதிக்கிறீர்களேயென்று நொந்து சொன்னதினால் எல்லாரும் மனக்கிலேசமாயிருந்தார்கள்.

அது தவிர மறுநாட் காலமேயும் முதனாள் வந்து புத்திசொன்ன குரு அங்கே வந்து அவரைப் பார்த்து உம்முடைய சங்கதிகள் எப்படியென்று கேட்க, இனி என்ன கேட்கிறீர்? சபிக்கப்பட்டு வேதனைக்குள்ளாய்த் தள்ளுண்டு போய்த்தானிருக்கிறேனென்றார்.

அப்பொழுது அந்தக் குரு ஏன் இப்படிச் சொல்லுகிறீர்? பராபரனுடைய சித்தத்தை ஆர் அறிவார்? அவர் உமக்கு உபத்திரவத்தை உண்டுபண்ணினது உமக்குக் கேடாயிராமல் நீர் அவரை அறிந்து நல்லவராய் நடக்கும்படி ஒருவதுவாயிருக்கவுங் கூடுமேயென்றார்.

அதற்கு அந்தத் துரை எதிர்மொழியாக நல்லது நல்லது, கையிற் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமோ? பராபரன் அந்த உபத்திரவத்தை உண்டுபண்ணினது நான் இனிமேற் சீர்ப்பட்டு நல்லவனாய் நடக்கவோ? அப்படியல்ல, மற்றுஞ் சகல சனங்களுங் காணும்படி என்னிற்பந்தத்தை வெளிப்படுத்தினதுதானென்று

சொல்லிச் சற்றே மயங்கிப் பின்பு தெளிந்து ஐயோ! சாவுவந்துவிட்டது. இனி மேல் என்ன செய்வேன்! நித்திய ஆக்கினைக்குட்பட்டேனேயென்று மறுசாலும் அவசமாய்ப்போனார்.

அதினால் அங்கேயிருந்தவர்கள் எல்லாரும் அவருக்கு அவத்தை வந்துவிட்டதென்று பராபரனை நோக்கி வேண்டிக்கொண்டார்கள். பின்னும் அவர் விழித்து அவர்களைப்பார்த்து நீங்கள் அழுது தொழுது மோட்ச நன்மையை எடுத்துக் காட்டி என்னை ஏன் வாதிக்கிறீர்கள் என்று தெய்வதூஷணைஞ் சொன்னார்.

அப்போது அந்தக் குரு அப்படிச் சொல்லாதையும். பராபரனுடைய கிருபைகிடைக்கும்படிவேண்டிக்கொள்ளுறோமே என்றார்.

துரையும் அவரைப்பார்த்துப் பராபரன் எனக்குச் சத்துருவாயிருக்கிறார். அவர் கிருபை தான் தரப் போகிறார். நீரென்ன பிதற்றிக்கொண்டிருக்கிறீரென்று ஒருக்கால் குழறி நரகத்தில் இருக்குஞ் சபிக்கப்பட்ட பசாசுகளே, உங்களோடே கூடவிருக்க நானும் வருகிறேன் வருகிறேன் என்று சொல்லிப் பயங்கரமான சாவாய்ச் செத்தார்.

இதை வாசிப்பவர்களே, தமது மேல் விசுவாசம் வைத்துத் தம்மை நேசிக்கிற யாவரும் நித்திய சீவனை அடையும்படி கிறிஸ்துநாதர் தாமே பாவம்போக்கும் பலியாகநின்று சகலபாவிகளும் பராபரனுடன் ஒப்புரவாகும்படிக்கான எதுக்களைச் செய்து ஆத்தும இரட்சிப்பின் வழியை உண்டுபண்ணி இருப்பதால் நீங்களுமுங்க

ள் மன அறிவுக்கும் கிறிஸ்துநாதருடைய திரு ச்சித்தத்துக்கும் விரோதமாகப் பராபரனுட னே எதிர்த்துநின்று அவருடைய கற்பனைகளை அற்பமாயெண்ணித் தூஷணித்துக்கொண்டிரு ந்துமேற்சொல்லப்பட்ட பிறஞ்சி நாட்போட் டெஷ்னுந் துரையைப் போலப் பயங்கரமாய் ச் சாவாமல் நன் மரணம் அடையும்படிக்குத் தெய்வ காரியங்களிலே பற்றுதல் வைத்துப் பி தாவாகிய பராபரனை நேசித்து உங்களை இரட் சிக்கும்படி பாடுபட்ட யேசுக்கிறிஸ்துவின்மே ல் விசுவாசம் வைத்து எந்நேரமும் வேண்டுத ல்பண்ணக்கடவீர்கள்.

இவைகளை வாசித்துங் கேட்டும் எச்சரிப்ப டையாதவர்கள் பராபரனுடைய தீர்மானங்க ள் எவையென்று கவனிப்பார்களாக.

அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டவன் தன் பிடரியை வளையாதிருந்தாற் குணமாகிறதற்கே துவில்லாமற் சடுதியாய் அழிக்கப்படுவான்.

தன் எசமானுடைய சித்தத்தை அறிந்தும் எத் தனமாயிராமலும் அவனுடையசித்தத்தின்படி செய்யாமலுமிருந்த ஊழியக்காரனே அநேக அ டிகளைப் பெற்றுக்கொள்வான்.

குமாரனில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியசீ வனையுடையவனாயிருக்கிறான்.குமாரனை விசுவா சியாதவனோ சீவனைக் காண்பதில்லை. பராபரனு டையகோபாக்கினை அவன்மேல்நிலைநிற்கும்.

முற்றும்.